


21.07.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக அனைத்து கட்சி கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

2. உலக பாரம்பரிய கலாச்சார குழுவின் 46-வது சிறப்பு கூட்டத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் ஆம்னி பேருந்துகள் நிறுத்துமிட பணிகள் அடுத்தமாத இறுதிக்குள் முடிவடையும் என்று மாநில அமைச்சர்
திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

4. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று நண்பகல் நிலவரப்படி 53 ஆயிரத்து 830 கனஅடியாக குறைந்துள்ளது.

5. தம்புலாவில் நடைபெறும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிரான ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□□

பட்ஜெட்

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்துவது தொடர்பாக மத்திய அரசு சார்பில் அனைத்து கட்சி கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு, மத்திய அமைச்சர்கள் திரு.ஜே.பி.நட்டா, திரு. ராஜ்நாத் சிங்,

காங்கிரஸ் சார்பில் திரு. ஜெயராம் ரமேஷ்,

தேசியவாத காங்கிரஸ் கட்சியின் திரு. பிர.ஃபுல் பட்டேல்,

திமுக சார்பில் திரு. டி.ஆர்.பாலு, திருச்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கி அடுத்த மாதம் 12-ம் தேதி வரை நடைபெற உள்ளது.

பொருளாதார ஆய்வறிக்கை நாளையும்,

நடப்பாண்டிற்கான நிதிநிலை அறிக்கை நாளை மறுநாளும் தாக்கல் செய்யப்படுகின்றன.

இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் 6 புதிய மசோதாக்களை மத்திய அரசு தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

□□□□□□□□□

பட்ஜெட் முதலமைச்சர்

மத்திய அரசு தாக்கல் செய்யவுள்ள பட்ஜெட்டில் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு இடம்பெற வேண்டுமென்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் நடுத்தர வர்க்க மக்களுக்கான வருமான வரி சலுகைகள்,

தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவுசாலை,

கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்கள் ஆகியவற்றிற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்,

வீட்டு வசதி திட்டங்களின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கான செலவு வரம்பு உயர்த்தப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றும் பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் இருக்கும் என்று தாம் நம்புவதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

□□□□□□□□□

பிரதமர்

உலக பாரம்பரிய கலாச்சார குழுவின் 46-வது சிறப்பு கூட்டத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் இன்றிரவு 7 மணிக்கு தொடங்கி வைக்கிறார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் உலக பாரம்பரிய பட்டியலில் இடம்பெறும் தளங்கள், தற்போதுள்ள 124 பாரம்பரிய சின்னங்களின் நிலை உள்ளிட்டவை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகிறது.

யுனெஸ்கோ தலைமை இயக்குநர் ஆட்ரி அசௌலே உள்ளிட்ட 150-க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த 2 ஆயிரம் சர்வதேச பிரதிநிதிகள் இதில் பங்கேற்கின்றனர்.

வரும் 31-ம் தேதிவரை நடைபெறும் இக்கூட்டத்தில் இந்தியாவின் வளமிக்க கலாச்சார பாரம்பரியம், தொன்று தொட்ட நாகரிகம், புவியியல் பன்முகத் தன்மை, சுற்றுலா தளங்கள், தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு உள்ளிட்டவற்றை விளக்கும் "வியப்பூட்டும் இந்தியா கண்காட்சி"யும் இடம்பெறுகிறது.

□□□□□□□□□

பிரதமர் – ஒலிம்பியாட்

சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா நான்காவது இடத்தை பிடித்துள்ளது குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில் இந்திய கணித ஒலிம்பியாட் குழு 4 தங்கம், 1 வெள்ளி, பதக்கத்தை வென்றுள்ளது, நாட்டின் இளைஞர்களுக்கு உத்வேகத்தை அளித்துள்ளதாக கூறியுள்ளார்.

□□□□□□□□□

குரு பூர்ணிமா

குரு பூர்ணிமா எனப்படும் ஆசிரியர்களுக்கு நன்றி பாராட்டும் திருநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா உள்ளிட்டோர் மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

□□□□□□□□□

ஷர்மா ஒலி

நேபாளத்தில் பிரதமர் திரு. ஷர்மா ஒலி தலைமையிலான அரசு பிரதிநிதிகள் சபையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு கோருகிறது

அந்நாட்டு அரசியலமைப்பு சட்டத்தின் படி புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர், பதவியேற்ற 30 நாட்களுக்குள் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□□□

சேகர்பாபு

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ரயில் சேவை தொடங்கப்படும் என்று மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்

சென்னை புறநகர் பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணிகளை இன்று ஆய்வுசெய்த அவர், இப்பேருந்து நிலையத்தில் 40 கோடி ரூபாய் செலவில் 111 ஆம்னி பேருந்துகளை நிறுத்தும் வகையில் கட்டப்பட்டு வரும் பேருந்துநிலைய பணிகள் முடிவடைந்து அடுத்தமாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூர் வண்டலூர் வெளிவட்ட சாலையில் 2 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு வரும் உடற்பயிற்சி பூங்காவை ஆய்வுசெய்த அமைச்சர் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

□□□□□□□□□

துரைமுருகன்

தென்பெண்ணை ஆற்றில் கர்நாடக அரசு அணை கட்டுவது தொடர்பாக தீர்ப்பாயம் அமைக்க வேண்டுமென்று உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் காட்பாடியில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், முல்லை பெரியாறு அணை உறுதியுடன் இருப்பதாக அணையின் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளதாக கூறினார்.

□□□□□□□□□

தமிழக அரசு அறிக்கை

உள்ளாட்சி நிர்வாகத்தில் நாட்டிலேயே தமிழகம் சிறந்து விளங்குவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் நகராட்சிகள், கிராம ஊராட்சிகளுக்கு இடைப்பட்ட நிலையில் பேரூராட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரமயமாதலில் பேரூராட்சிகளின் பங்கு மகத்தானது என்றும், ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி என ஆட்சி நிர்வாக அமைப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு அரசு திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

□□□□□□□□□□

எழுத்து தேர்வு

தமிழக அரசு தொடக்கப்பள்ளிகளில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கான எழுத்து தேர்வு மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்றது

26 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இத்தேர்வை எழுதினர்.

நாமக்கல் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய தேர்வு மையங்களை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா இன்று நேரில் ஆய்வுசெய்தார்.

ராணிபேட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, ஏசுஏ பள்ளி தேர்வு மையங்களை ஆட்சித்தலைவர் திருமதி. சந்திரகலா பார்வையிட்டார்.

□□□□□□□□□□

கலந்தாய்வு

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டின் பொறியியல் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நாளை தொடங்குகிறது.

மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நாளைமுதல் வரும் 27-ம் தேதிவரையும்,

பொதுப்பிரிவினருக்கான கலந்தாய்வு வரும் 29-ம் தேதி முதல் செப்டம்பர் 3-ம் தேதிவரையும் நடைபெறும்.

□□□□□□□□□

இருவரி

கன்னியாகுமரி மாவட்ட புதிய ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பேற்றுக் கொண்ட திருமதி. அழகு மீனா மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நமக்குநாமே திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு பங்களிப்புடன் பொதுமக்கள், தனியார் நிறுவனங்கள், பங்களிப்பு தொகையை வழங்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்நாள் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. தர்ப்பகராஜ் கூறியுள்ளார்.

நெல்லை மாவட்டம் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக வனச்சரகத்திற்கு உட்பட்ட மாஞ்சோலை பகுதியில் தொடர்மழை காரணமாக இன்றுமுதல் 3 நாட்களுக்கு சூழல் சுற்றுலா செல்ல தடைவிதிக்கப்படுவதாக புலிகள் காப்பக துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

□□□□□□□□□

அணை

இதனிடையே காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் தண்ணீரின் அளவு இன்று வினாடிக்கு 53 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கபினி அணையிலிருந்து வினாடிக்கு 33 ஆயிரம் கனஅடியும், கிருஷ்ணராஜசாகர் அணையிலிருந்து 16 ஆயிரம் கனஅடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணைக்கு இன்றுகாலை 71 ஆயிரத்து 777 கனஅடியாக தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில்,

நண்பகல் நிலவரப்படி 53 ஆயிரத்து 830 கனஅடியாக குறைந்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 69.80 அடியாக உயர்ந்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில் ஒகேனக்கல் கூட்டுகுடிநீர் திட்டத்தின் கீழ் தண்ணீரை நீரேற்றம் செய்வதில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு சுழற்சி முறையில் குடிநீர் வழங்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் குடிநீரை காய்ச்சி வடிகட்டி பயன்படுத்துமாறும் அவர் அறிவுறுத்தி உள்ளார்.

நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழைக் காரணமாக திண்டுக்கல் மாவட்ட அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

வரதமா நதி அணை அதன் முழு கொள்ளளவான 66 அடியை எட்டியுள்ளது.

65 அடி கொள்ளளவு கொண்ட பாலாறு, பொருந்தலாறு அணை தற்போது 36 அடியை எட்டியுள்ளது.

கன்னியாகுமரி விவேகானந்தர் மண்டப கடற்பகுதியில் நீர்மட்ட தாழ்வு காரணமாக படகு சேவை இன்று தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கனமழை பெய்துவருவதை அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு அறிவுறுத்தி உள்ளார்.

மழை வெள்ள பாதிப்புகள் குறித்து 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்றும், நீரோடைகளுக்கு அருகில் செல்லவோ, குளிக்கவோ வேண்டாம் என்றும் எச்சரித்துள்ளார்.

தொடர்மழைக் காரணமாக குற்றால அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதை அடுத்து சுற்றுலா பயணிகள் அதிகளவில் அங்கு குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□□□

கோவில்

மதுரை கள்ளழகர் திருக்கோவில் ஆடி பெருந்திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

□□□□□□□□□

மகளிர் கிரிக்கெட்

தம்புலாவில் நடைபெறும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு எதிரான ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதலில் பேட் செய்கிறது.

டாஸ் வென்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முதலில் பந்துவீச தீர்மானித்தது.

□□□□□□□□□

கிரிக்கெட்

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று 20-20 கிரிக்கெட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக இந்திய அணி நாளை இலங்கை செல்கிறது.

இரு அணிகளுக்கு இடையிலான 20-20 கிரிக்கெட் போட்டிகள் வரும் 27, 28, 30 ஆகிய தேதிகளில் பல்லகெலேவிலும்,

ஒருநாள் போட்டிகள் அடுத்தமாதம் 2, 4, 7 ஆகிய தேதிகளில் கொழும்புவிலும் நடைபெற உள்ளன.

□□□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

□□□□□□□□□